# Videsh Sampark Seminar at Bengaluru

**February 26,2020**

## பெங்களூரில் விதேஷ் சம்பார்க் கருத்தரங்கு

பிப்ரவரி 26,2020

2020 பிப்ரவரி 26 அன்று பெங்களூரில் ஏற்பாடு செய்யப்பட்ட விதேஷ் சம்பார்க் தொடரின் கீழ் மாநில வெளியீட்டு நிகழ்விற்காக மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீ. வீ. மூர்லீதரன் பெங்களூருக்கான வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் குழுவை வழி நடத்தினார். மாண்புமிகு சட்டம், நாடாளுமன்ற விவகாரங்கள் , சட்டம் மற்றும் சிறு நீரப்பாசன அமைச்சர், கர்நாடக அரசு ஸ்ரீ. ஜெ. சி . மது சுவாமி, கர்நாடக அரசின் பிரதிநிதிகள் குழுவை வழி நடத்தினார், இதில் மாநில அரசின் மூத்த அதிகாரிகள் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள் இடம்பெற்றனர். ஆட்சேர்ப்பு முகவர், கர்நாடகா மற்றும் ஊடகங்களைச் சேர்ந்த பிற பங்குதார்கள் பங்கேற்றனர்.

விதேஷ் சம்பார்க் திட்டத்தின் கீழ் கர்நாடக அரசுடன் இணைந்து வெளிவிகார அமைச்சகம் பெங்களூரில் மாநில வெளியீட்டு நிகழ்வை ஏற்பாடு செய்தது. தொடக்க அமர்வில் வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீ. வீ. மூர்லீதரன் மற்றும் கர்நாடக சட்ட அமைச்சர் ஸ்ரீ. ஜெ. சி. மது சுவாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பாதுகாப்பான மற்றும் சட்டபூர்வ இடம்பெயர்வுகளை வழங்குவதற்காக தூதரகம், பாஸ்போர்ட் மற்றும் புலம்பெயர் பிரச்சினைகள் தொடர்பான அமைச்சின் திட்டங்கள், திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் குறித்து மாநில அரசின் பங்குதாரர்கள் மற்றும் அதிகாரிகளிடைடையே விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக இந்த நிகழ்வில் ஆழ்ந்த உரையாடல் இடம்பெற்றது. ஒரு புதிய முயற்சியில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு பிரச்சினைகள் குறித்த விளக்கக் காட்சிகள் இடம் பெற்றன. பல தரப்பட்ட பங்குதாரர்களுடனான ஊடாடும் அமர்வுகள் மூலம், இந்த பகுதிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் மாநில அரசும் அமைச்சும் எவ்வாறு ஒருங்கிணைப்பை வலுப்படுத்த முடியும் என்பதைப் பற்றி மூளைப் புயலுக்கு ஒரு வாய்ப்பை வழங்கியது.

எதிர்வரும் மாதங்களில் பல்வேறு மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

நியூ டெல்லி

பிப்ரவரி 26,2020

DISCLAIMER : This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.